# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## ஹேஷா சிநேகபூர்வ மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**ஹேஷா சிநேகபூர்வ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஹர்ஷண ராஜகருணா அவர்களால் 2023, செத்தெம்பர் மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, ஒகத்து மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **202 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# ஹேஷா சிநேகபூர்வ மன்றம் (கூட்டிணைத்தல்)

## ஹேஷா சிநேகபூர்வ மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

“ஹேஷா சிநேகபூர்வ மன்றம்” என அழைக்கப்படுவதும், அறியப் படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப் பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங் களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாத லாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, ஹேஷா சிநேகபூர்வ மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப் படலாம். சுருக்கப் பெயர்

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஹேஷா சிநேகபூர்வ மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது அதன்கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ‘‘கூட்டுத்தாபனம்’’ எனக் குறிப்பீடு செய்யப்படும்) “ஹேஷா சிநேகபூர்வ மன்றம்” என்னும் பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு, ஹேஷா சிநேகபூர்வ மன்றத்தைக் கூட்டிணைத்தல்

அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம் என்பதுடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) ஒழுக்க மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் வழிவகைகளை மேற்கொள்ளல்;

(ஆ) சிரேஷ்ட பிரஜைகள் அமைப்புக்களால் வழங்கப்படும் சேவைகளை உயர்த்தும் நோக்கில் அவற்றுக்கு உதவி புரிதலும் ஊக்குவித்தலும்;

(இ) சிறுவர் மற்றும் பெண்களின் விருத்திக்கென சமூக நடமாடும் கருத்திட்டங்கள் மற்றும் கல்வி அல்லது பயிற்சித் திட்டங்களை வடிவமைப்பதும் நடைமுறைப்படுத்த உதவுதலும்;

(ஈ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைதலும் ஒத்துழைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்

**4**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் முகாமைத் தவிசாளர், செயலாளர், பொருளாளர் உட்பட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிலுள்ள விதிகளுக்கிணங்கத் தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற பதினொரு பேர்களுக்கு மேற்படாத எண்ணிக்கையைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய முகாமைக் குழுவொன்றினால் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலிலுள்ள விதிகளுக்கும் அமையவும் முகாமை செய்யப்படுதலும் வேண்டும்.

(2) முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முந்திய நாளன்று பதவிவகிக்கின்ற முகாமைக்குழுவின் உறுப்பினர் களையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, அம்முகாமைக் குழுவானது இச்சட்டத்தின் 6 ஆம் விதியின்கீழ், புதிய முகாமைக் குழுவொன்று தெரிவுசெய்யப்படும்வரை தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்

**5**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத் தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத் தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடனோ அல்லது பிணைப்பொறுப்பின்றியோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடு செய்வதற்கும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையி லீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்குதல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப்பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றிற்காக இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறை யானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மை வகைப்படுத்தல், உறுப்பினர்களை சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல்;

(ஆ) பதவிதாங்குநர்களை தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது அவர்களை பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் உறுப்பினர்களின் தத்துவங்கள், நடத்தை மற்றும் கடமைகள்;

(இ) முகாமைக்குழுவின் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தலும் அக்குழுவின் கடமைகள், தத்துவங்கள் நடத்தை மற்றும் முகாமைக்குழுவின் பதவிக்காலமும்;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்களின் நடத்தைகள், பணிகள், கடமைகள் மற்றும் தத்துவங்கள்;

(உ) முகாமைக்குழுவின் கூட்டங்களைக் கூட்டும்போதும் நடாத்தும்போதும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கை முறைகள் மற்றும் அத்தகைய கூட்டங்கள் பற்றிய நேரங்கள், இடங்கள், அறிவித்தல்கள், நிகழ்ச்சி நிரல் அவற்றின் கூட்டநடப்பெண் மற்றும் அவற்றின் அலுவல்களைக் கொண்டு நடாத்தல்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும், அதன் நிதியின் கட்டுக்காப்பும் அதன் கணக்குகளின் பராமரிப்பும் கணக்காய்வும்; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை நிர்வகித்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்படும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதி ஒன்று ஆக்கப்படுவதைப் போன்று அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*மன்றத்தால் செலுத்தப்படற்பாலனவும் மன்றத்துக்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்*

**7**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும், கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்துக்கு வருமதியான எல்லாத் தனிசுகள் மன்றத்துக்கு செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்*

**8**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கொடைகள் மூலமாக அல்லது இறுதி விருப்பாவணக் கொடைகள் அல்லது மானியக் கொடைகள், நன்கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்ற வகையாக இதுகாலவரை கிடைக்கப்பெற்ற எல்லாப் பணங்களும் முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடிய ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும், பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**9**. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின் கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா

ஆதனங்களும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுமுள்ள முழுத்தத்துவத்தை இச்சட்டத்தின் ஆறாம் பிரிவின்கீழ் கூட்டுத் தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கலைக்கப்பட்ட தன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**10.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படல் ஆகாது. ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவன மானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாப னத்தின் கணக்குகளும் கணக்காய்வும்*

**11.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும், பொறுப்புக்களும் அத்துடன் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய் வாளர் ஒருவரால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காளர்" என்பது,

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக வுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் வதிவும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று என பொருள் படும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

***12***. கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது தலைவர்/ முகாமைப் பணிப்பாளர் அல்லது முகாமைச் சபையினால் நியமிக்கப்பட்ட மன்றத்தின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி, எத்தன்மைத்தான சாசனமெதிலும் பொறிக்கப்படலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுகளித்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்கள் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்*

***13***. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

***14***. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.